**நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**அறந்தாங்கி.**
**முன்னிலை: திரு.எஸ்.சக்திநாராயணமூர்த்தி பி.எஸ்.சி., எல்.எல்.பி.,**
**நீதித்துறை நடுவர், அறந்தாங்கி.**
**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11 ஆம் நாள் புதன்கிழமை**
**Crl.M.P.No. 171/2026**

சுந்தரராஜன்,
த/பெ. கருப்பன்,
மின்னாமொழி,
பெருமருதுார்,
புதுக்கோட்டை மாவட்டம். ....... மனுதாரர்/வாகன உரிமையாளர்

/எதிர்/

காவல் உதவி ஆய்வாளர்,
நாகுடி காவல் நிலையம்,
நாகுடி.
குற்ற எண்.17/2024. .......எதிர்மனுதாரர்கள்/குற்றமுறையீட்டாளர்கள்

இம்மனுவானது இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.M.S. செந்தில்குமார், B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், அரசு தரப்பில் கற்றறிந்த குற்றவியல் அரசு உதவி வழக்கறிஞர் நிலை–II ஆஜராகியும் இரு தரப்பு மனு மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும் .......

**உத்தரவு**

இம்மனுவானது U/s 497–இன் கீழ் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுவில் உள்ள பொருண்மைகளின் சுருக்கம் :**

1.1) மனுதாரரின் மனுவில், மனுதாரர் தான் வழக்குச் சொத்தின் உரிமையாளர் ஆவேன் என்றும், மனு சொத்தான மாட்டுவண்டியானது மேற்படி குற்ற வழக்கு சம்பவத்தில் ஈடுப்பட்டதாக கூறி, நாகுடி காவல் நிலையத்தாரால் கைப்பற்றப்பட்டு நாகுடி காவல் நிலைய குற்ற எண்.17/2024, U/s.303(2) BNS r/w 21(1), 21(2) of MMDR Act இன் கீழான வழக்கில்

பதிவுசெய்யப்பட்டு, காவல் நிலையத்தில் இருந்து வருகிறது என்றும், மேற்படி தனக்கு சொந்தமான வழக்கு சொத்து தொழில் பயன்பாட்டிற்கு தேவைப்படுகிறது என்றும், மேற்படி வழக்கு சொத்து காவல் நிலையத்தில் சரியான பராமரிப்பில்லாமலும், மழையிலும், வெயிலிலும் இருந்து வருவதால் உபயோகமற்ற நிலைக்கு உள்ளாகி வாகனம் முற்றிலும் பழுதாகி பயனற்றதாகிவிடும் என்பதால், சமூகம் கோட்டார் அவர்கள் மேற்படி வழக்கு சொத்தான மாட்டுவண்டி வாகனத்தை காவல்துறையினர் மனுதாரர் வசம் இடைக்காலமாக ஒப்படைக்க உத்தரவு செய்ய வேண்டி இம்மனுவானது மனுதாரரால் BNS பிரிவு 497–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) எதிர்மனுதாரரின் ஆட்சேபணை:**

எதிர்மனுதாரரான அரசு தரப்பில், மேற்படி வழக்கின் சொத்தை மனுதாராருக்கு கொடுக்கும் பட்சத்தில் மனுதாரர் வழக்கின் சொத்தை உருக்குலைக்கவோ, உருமாற்றி வேறு நபருக்கு விற்கவோ கூடும் என்பதால், வழக்கின் சொத்தை மனுதாரருக்கு கொடுக்க கடுமையாக ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

**3) இம்மனுவில் தீர்வு காணப்படவேண்டிய வினா யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா ? என்பதாகும்.**

**4) தீர்வு:**

4.1) இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டு வழக்கின் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

4.2) எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கின் புலன் விசாரணைக்கு வாகனமானது எந்த வகையில் பயன்படுத்தப்படுகிறது என்று குறிப்பிட்டு ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. மனுதாரர் தரப்பின் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதில் மனுதாரர் வாகனத்தின் உரிமையாளர் என்பது தெளிவாக தெரியவருகிறது. மனுதாரர்தான் வழக்குச் சொத்தின் உரிமையாளர் என்பதை

பொறுத்து இந்த வழக்கில் எந்த பூசலும் கிடையாது என்பதை கருத்தில் கொண்டும், மனு சொத்தான மாட்டுவண்டியினை நீண்ட நாட்கள் பயன்படுத்தாமல் இருந்தால் அதன் மதிப்பும், அதன் தன்மையும் சீர்கெடும் என்பதை கருத்தில் கொண்டும், நீதியின் நலன் பொருட்டும் இம்மனு அனுமதிக்கப்படுகிறது. எனவே மேற்படி குற்ற எண்ணிலுள்ள மனுவின் வழக்குச் சொத்தாகிய மாட்டுவண்டியை மனுதாரர் கீழ்கண்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்து வாகனத்தை இடைக்காலமாக பெற்றுக் கொள்ளலாம் என்று உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,** இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது.

**<u>நிபந்தனைகள்:</u>**

1) இருநபர்கள் தலா <u>ரூ.10,000/–</u> க்கான பிணைய பத்திரத்தினை எழுதி தர வேண்டும்.

2) மனுதாரர் மனுச்சொத்தை புகைப்படம் எடுத்து பிரிவு 63 BSA மற்றும் குற்றவியல் நடைமுறை விதிகள் 257(1) இன் கீழ் சான்றுதழுடன் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.

3) மனுச்சொத்தை விற்கவோ, உருமாற்றம் செய்யவோ, அடமானம் வைக்கவோ கூடாது.

4) மனுதாரர் மனுச்சொத்தைப் பொறுத்து உறுதிமொழி ஆவணம் நீதிமன்றத்தில் எழுதிக் கொடுக்க வேண்டும்.

5) வழக்கு விசாரணையின் போதும், நீதிமன்றம் உத்தரவிடும் போதும் மனுச் சொத்தை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும்.

6) வழக்கு சொத்தினை மீண்டும் எவ்வித குற்ற செய்கைகளிலும் ஈடுபடுத்தக் கூடாது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு பின் அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்த பின்னர் இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்/—**
**எஸ்.சக்திநாராயணமூர்த்தி,**
**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**

**//உண்மை நகல்//**

SAKTHINARAYANA MOORTHI S

Digitally signed by SAKTHINARAYANA MOORTHI S
Date: 2026.03.11 04:53:50 +0530

**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**